அனுப்புநர்

திருமதி.ஆர்.ஹேமலதா, எம்.ஏ.,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
சென்னை-01.

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்,
சென்னை பெண்கள் மாகாண
மேல்நிலைப்பள்ளி வளாகம்,
எழும்பூர், சென்னை - 08.

ந.க.எண்.யி1/1674/2022-1, நாள்.14.06.2022.

ஐயா/அம்மையீர்,

பொருள் : ஆதிதிராவிடர் நலம் - சென்னை மாவட்டம் - போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை - 2022-2023 - பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை : சென்னை ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.எல்4/14527/2022, நாள்.20.05.2022 மற்றும் 04.06.2022.

******

2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்கப்படும் மாணாக்கர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் அளவில் தயார் நிலையில் வைக்க வேண்டிய முக்கிய பொருண்மைகள் பின்வருமாறு.

1. அனைத்து பள்ளிகளுக்கும் UDISE பெற்றிருக்க வேண்டும். ஏற்கனவே பெற்றிருப்பின் அவை பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
2. அனைத்து பள்ளிகளிலும் மாணவர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பிப்பது குறித்து உதவி செய்யும் பொருட்டு, Scholarship Help Desk ஒன்றை அமைத்திட வேண்டும்.
3. பள்ளிகளில் கல்வி உதவித்தொகைக்கென Nodel Officer நியமித்திட வேண்டும்.

4. மாணாக்கரின் பெயர் கல்வி சான்றிதழ்களில் (10 ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு) உள்ளவாறு இல்லையெனில், பள்ளி சான்றிதழ்களில் இடம்பெற்றுள்ளவாறு மாணாக்கரின் பெயர் ஆதாரில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.
5. மாணாக்கர்கள் கட்டாயம் இணையவழி மூலம் (Online) வருமான சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழ்கள் பெற்றிருக்க வேண்டும்.
6. மாணாக்கரின் ஆதார் எண், அம்மாணவரின் வங்கி கணக்குடன் இணைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
7. மாணாக்கரின் பெயரில் வங்கி கணக்கு எண் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருக்கும் பட்சத்தில், அவ்வங்கி கணக்கு எண் செயல்பாட்டில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.
8. மாணாக்கரின் வங்கி கணக்கில் இடம் பெற்றுள்ள பெயர், அம்மாணாக்கரின் பள்ளி சான்றிதழ்களில் உள்ளவாறு இடம்பெற்றுள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

மேற்கண்ட விவரங்களை பின்பற்ற அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு சென்னை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

14/6/22

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
சென்னை மாவட்டம்.

14/06/2022

நகல்
ஆணையர்,
ஆதிதிராவிடர் நல ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 05 – தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.